# C.S.I TAMIL CHURCH - OMAN


# “பாலைவன மன்னா”




மன்னா – 9 ஜனவரி 2020 பிரதி – 10



# ஆயர் மடல்



காக்கும் கடவுளாம் கிறிஸ்து இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020-ம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கவும், புதிய ஆசிகளோடு வாழ்வைத் தொடரவும் ஆண்டவர் நமக்கு தந்துள்ள கிருபையின் வழிநடத்துதலுக்காய் நன்றி செலுத்துவோம்.

**பழையன கழிதலும் புதியன புகுதலும்:-**

புத்தாண்டில் பிரவேசிக்கும்போது நம்மை பழமைப்படுத்தும் பண்புகளைக் களைந்து புதிய சிந்தையோடும், புத்தாக்க வாழ்வோடும் பயணிக்க பணிக்கிறேன். நமது வாழ்வு ஆண்டவரால் தரப்படும் ஈவு. அதை ஞானமாய் பயன்படுத்தி புதுப்பித்துக் கொள்ளவேண்டியது நமது கடமை. எனவே பகைமை, பொறாமை, மேட்டிமை, பொய்மை, பெருமை ஆகியவைகளைக் களைந்து, உண்மை, நேர்மை, இனிமை ஆகியவற்றைப் பெருக்கி புத்தாண்டில் புதுப்பொலிவுடன் வாழ எத்தனிப்போம்.

**பழைய தீர்மானங்களும் புதிய எதிர்பார்ப்பும்:-**

ஆண்டுதோறும் நமது ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்காய் நாம் எடுக்கும் தீர்மானங்கள் நாட்கள், மாதங்கள் செல்ல பழமையாகிப் போகின்றன. தீமையானவைகளைக் களைந்து நன்மைக்குரிய தீர்மானங்களை நமது திட்டங்களில் புத்தாக்கம் செய்துக் கொள்வோம். புதிய தீர்மானங்களும், புதிய திட்டங்களும் நம்முடைய புதிய எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்யும் காரணிகளாக அமையும்.

புத்தாண்டின் தொழுகைகள், கிளைச்சங்க கூடுகைகள், உபவாசக் கூடுகைகள் மற்றும் அனைத்துச் சிறப்புத் தொழுகைகளிலும் குடும்பமாக பங்கெடுத்து, இந்த ஆண்டில் ஆண்டவர் நமக்கு வைத்திருக்கும் அனைத்து ஆசிகளையும் முழுமையாய் பெற்றுக்கொள்ள ஆயத்தமாவோம்.


உங்கள் அனைவருக்கும் இறை இயேசுவின் இனிய திருப்பெயரில் **புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

# ஆயர் அருளுரை

## உன்னை காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் : கர்த்தர்



இமைக்காமல் காக்கும் இறை இயேசுவின் இனிய நாமத்தில் புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும், ஆசிகளையும் கூறுகிறேன்.

ஆபத்து நிறைந்த விபத்து நிறைந்த நிலையில்லாத உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு கர்த்தர் நல்லதொரு வாக்குத்தத்தத்தை தந்திருக்கிறார்.

**உன்னை......:**

நாம் ஆண்டவருக்கு விலையேறப்பெற்றவர்கள் என்பது, உன்னை என்றும் வார்த்தை சுட்டிக்காட்டுகிறது. உன்னைத் தெரிந்துகொண்டேன், உன்னை பெயர்சொல்லி அழைத்தேன், உன்னை ஆசீர்வதிப்பேன், உன்னை உயர்த்துவேன் இவைகள் எல்லாம் நம்மீது ஆண்டவர் கொண்டுள்ள கரிசனையையும், அன்பையும் தனித்துவத்தையும் விளக்குவதாக அமைகிறது. இந்த ஆண்டு எப்படியிருக்குமோ என்னும் எதிர்ப்பார்ப்போடு புதிய ஆண்டுக்குள் பிரவேசித்திருக்கும் நம்மை ஆண்டவர் அழைப்பதைப் போன்ற வார்த்தையாக முதல் வார்த்தை அமைகிறது.

**உன்னை காக்கும்படிக்கு..... :**

அழைக்கும் ஆண்டவர் ஆதரவு செய்கிறார். காக்கும்படிக்கு... என்னும் வார்த்தை இந்நாட்களில் இன்றியமையாத ஒன்று என்று நாம் அறிவோம்.

500 ரூபாய் பணத்திற்கு வாங்கும் பொருளுக்கு வாரண்டி, கேரண்டி இருக்கிறது. ஆனால் அதை வாங்கும் மனிதனுக்கு வாரண்டியுமில்லை, கேரண்டியுமில்லை. பிறப்பிலே பாதுகாப்பில்லை, வாழ்விலே பாதுகாப்பு இல்லை, பணியிலே பாதுகாப்பு இல்லை, பயணத்திலே பாதுகாப்பு இல்லை. பாதுகாப்பு இல்லாத உலகின் பாதுகாப்பு தர ஆண்டவர் விரும்புகிறார் என்பதுதான் உண்மை.

புரிந்துகொண்ட சங்கீதக்காரன் தாவீது சங்கீதம் 127:1,2-ல் “கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா; கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளி விழித்திருக்கிறது விருதா” என்று குறிப்பிடுகிறார். இறைமகனாம் இயேசு தன் பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்ளும்போது யோவான் 17:15-ல் “நீர் அவர்களைத்

தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்'' என ஜெபிப்பதைக் கண்டுக்கொள்ள முடிகிறது.

தீமை நிறைந்த உலகில் நம்மைக் காக்க வேண்டுமாயின் அது நம்மால் இயலாத காரியம். எனவே இறைத்துணை நம்மைக் காக்கும்படி வேண்டிக்கொள்வது சிறப்பு. எனவேதான் ''என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும்'' என்னும் திருவசனத்தை வாசல்களிலும், வாகனங்களிலும் நாம் பொறித்து வைத்துள்ளோம். அதே வேளையில் அந்த உணர்வை நாம் வளர்த்துக்கொள்வதும் இன்றியமையாததாகும்.

**உன்னைக் காக்கும்படி நான் உன்னுடனே இருக்கிறேன்.... :-**

வசனத்தின் தொடர்ச்சி கர்த்தரின் உடனிருப்பைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது. இம்மானுவேல் என்பதற்கு ''தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாம்'' என்று துவங்கிய இயேசு கிறிஸ்துவின் உடன் இருக்கும் பயணம்.

''இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்'' (மத்தேயு 28:20) என்று தொடர்வதைக் காண முடிகிறது.

உள்ளத்தில் ஊக்கம் ஏற்படவேண்டுமாயின் உடன் ஒருவர் இருத்தல் வேண்டும். எனவேதான் சிறுபிள்ளைகள் தனியாகவோ அல்லது மின்சாரம் இன்றியோ இருக்கும்போது அம்மா என்று கத்துவதும், பாடல்களைப் பாடுவதும். இதில் சிறப்பு அனுபவம் என்னவென்றால் உடனிருப்பவர் அனைத்து ஆற்றலும் உடையவர் என்றால் நம் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அதிலும் நம்மைக் காக்கும்படிக்கு நம் ஆண்டவரே நம்முடன் இருப்பார் என்றால் நம் வாழ்வில் பயமே இல்லை எனலாம்.

இந்த புத்தாண்டின் அனுபவம் இப்படியாக அமையவேண்டும் என விசுவாசிப்போம்; வேண்டுதல் செய்வோம். நிச்சயமாக இறை இயேசுவின் உடன் இருத்தல் அனுபவத்தை உணர்ந்து உலகில் வாழவும், உன்னத அனுபவம் பெற்றுக்கொள்ளவும் உலக இரட்சகர் உங்களுக்கு உதவி செய்வாராக.

புத்தாண்டு ஆசிகளும், வாழ்த்துக்களும் உங்களை நிரப்புவதாக ஆமென்!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி



விவசாயி ஒருவன் சாக்குமூட்டை ஒன்றில் தானியங்களை களஞ்சியத்திற்கு எடுத்துச் சென்றுக் கொண்டிருந்தான். தானியங்கள் அந்த சாக்கினுள் இருக்கமுடியாமல் அழுது கொண்டிருந்தன. சாக்கிற்குள் வண்டுகளும், புழுக்களும் இருட்டுமாயிருந்தது. சாக்கில் ஒரு துவாரம் இருந்தது.

சில தானியங்களால் உள்ளே இருக்க முடியவில்லை. நாங்கள் ஓட்டையின் வழியே தப்பிக்கப்போகிறோம் என்றுச் சொல்லி நழுவி வெளியே ரோட்டில் விழுந்தன. குருவிகளும் எலிகளும் அவற்றை தின்று போட்டன.

மூட்டை களஞ்சியத்தில் வைக்கப்பட்டபோது இன்னும் சில தானியங்கள் வெளியே செல்ல நினைத்து நழுவி களஞ்சியத்தின் தரையில் விழுந்தன. இப்பொழுது கொஞ்சம் மூச்சுவிட முடிந்தது. ஆனால் பணியாள் வந்து அவற்றை சுத்தம்செய்து சாக்கடையில் போட்டான். மற்ற தானியங்களுக்கு நெருக்கடியில் மூச்சு முட்டியது. எவ்வளவோ நாளோ தெரியாது என அவை அழுது கண்ணீர் வடித்துக்கொண்டே இருந்தன.

ஒருநாள் அந்த விவசாயி வந்து மூட்டையை நிலத்திற்கு எடுத்துச் சென்றான். சாக்கைத் திறந்து தானியங்களை விதைத்தான். தரை அருமையாக இருந்தது. காற்று சில்லென வீசியது. உண்ண உணவும், குடிக்க நீரும் தரப்பட்டன. அவை வளர்ந்து வளர்ந்து ஏராளமான விளைச்சலைக் கொடுத்தன. மகிழ்ச்சியாக காற்றில் அசைந்தாடின.

இவ்வாறுதான் கடவுளின் கரத்திற்குள் அடங்கி இருப்பது சுலபம் அல்ல. வேதனைகளையும், கடினமான நேரங்களையும் சகிக்கத்தான் வேண்டும். தப்ப நினைப்போம், ஆனால் ஆபத்தான முடிவை சந்திப்போம்.

ஆனால் கர்த்தருடைய பலத்த கரத்துக்குள் அடங்கி இருப்போமானால் ஏற்ற காலத்தில் அவர் நம்மை உயர்த்துவார். ஆகவே ஏற்றக் காலத்திற்காக பொறுமையோடு காத்திருங்கள். கர்த்தர் நம்மை குறித்ததான எல்லா காரியங்களையும் திட்டமிட்டு வைத்திருக்கிறார். நாம் அவருடைய கைக்குள் அடங்கி இருந்து அவரையே சார்ந்து இருக்கும்போது ஏற்றக்காரியங்களை ஏற்றநேரத்தில் நமக்கு செய்து முடிப்பார்.

ஆகவே அதனதின் காலத்தில் நேர்த்தியாய் செய்கிற தேவனுடைய கரத்தில் அடங்கி இருப்போம்.

ஆகையால், ஏற்றக்காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (1பேதுரு 5:6).

**அன்புடன் போதகர்**

# புத்தாண்டில் வெற்றி நிறைந்த ஓட்டம்



பந்தயத்திற்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம் (1கொரி. 9:25).

புத்தாண்டில் பிரவேசித்திருக்கும் உங்கள் யாவருக்கும் இறை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். புதிய ஆண்டு வெற்றி நிறைந்த வாழ்வு வாழ எதிர்பார்க்கும் நாம் நம்மை ஆயத்தப்படுத்த ஆண்டவர் அழைக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! நாமும் வாழ்க்கை என்ற ஓட்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிறோம். இந்த ஓட்டத்திலே நமக்கு அநேக தோல்விகள், நஷ்டங்கள், கவலைகள், சோர்வுகள், இன்னும் பலவிதமான போராட்டங்கள் போன்ற கசப்பான அனுபவங்கள்தான் நம்மை பின்தொடர்ந்து வந்துக்கொண்டிருக்கிறது. ஏன் நம்முடைய வாழ்க்கை என்ற ஓட்டத்திலே பின்னடைவுகள். அதற்காக நாம் சரியாக ஆயத்தமாகவில்லை. பாருங்கள் ஓட்டப்பந்தைய வீரர் அதிகாலையிலேயே வந்து ஆயத்தமாகிறான். நாமும் அதிகாலையிலேயே எழுந்திருக்க பழகவேண்டும். அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள் என்று சாலமோன் ஞானி நீதிமொழிகள் 8:17-ல் கூறுகிறார்.

**பயிற்சி :-**

ஒரு தனிப்பட்ட மனிதனின் வெற்றி என்பது அவனது முழு பிரயாசத்தில் தான் அமைந்துள்ளது. உதாரணமாக ஒரு ஓட்ட பந்தய வீரனை எடுத்துக்கொள்வோம். அவன் உலகத்திலேயே சிறந்த வீரனாக விளங்க வேண்டுமென்றால், அவன் எவ்வளவாய் பிரயாசப்படுகிறான். அவன் அதிகாலையிலேயே எழுந்திருக்கிறான். ஆயத்தமாகிறான்; ஓடிப்பழகக் கூடிய இடத்திற்கு செல்லுகிறான். அங்குள்ள ஆசிரியரோடு நான் சிறந்த ஓட்ட வீரனாவதற்கு எந்த எந்த காரியங்களை செய்யவேண்டும்? எப்படி ஓடவேண்டும்? எவைகளையெல்லாம் களைந்துபோடவேண்டும்? என்று ஆலோசனைக் கேட்கிறான். அந்த ஆசிரியர் சொல்லுகிறதுபோலவே அவன்கேட்டு அவைகளை ஏற்றுக்கொண்டு, அவைகளை தன் வாழ்க்கையில் நடைமுறையில் கடைபிடிக்கிறான். அப்பொழுது அவன் உலகத்திலேயே மிக சிறந்த ஓட்ட வீரனாக மாறி பெரிய வெற்றியை பெறுகிறான்.

**முயற்சி:-**

மாற்கு 1:35-ல் வாசிக்கிறோம், இயேசு கிறிஸ்து அதிகாலையில்

இருட்டோடே எழுந்து புறப்பட்டு என்று எழுதப்பட்டுள்ளது. ஆகவே அதிகாலை என்பது சூரியகதிர்களின் ஒளி தெரிவதற்கு முன்பே என்று எழுதப்பட்டுள்ளது. வானம் இருட்டாக இருக்கும்போதே நாம் எழுந்திருக்கவேண்டும்; எழுந்து புறப்படவேண்டும். விளையாட்டு வீரன் ஓட ஆயத்தமாகி புறப்படுகிறான். இயேசுவும் எழுந்து புறப்படுகிறார்; அதுபோல நாமும் அதிகாலையில் எழுந்து ஜெபிக்க ஆயத்தமாகவேண்டும். சிலபேர் எழுந்து அப்படியே படுக்கையில் முகங்குப்புற விழுந்து ஜெபிக்க ஆரம்பிப்பார்கள். அப்படியே தூங்கிவிடுவார்கள். பின்பு, என்னால் ஜெபிக்க இயலவில்லை என்று சொல்லுகிறார்கள். ஏனென்றால் ஆயத்தம் இல்லை. ஆகவே, அதிகாலையில் இருட்டோடே எழுந்து ஆயத்தமாகவேண்டும். அடுத்ததாக, விளையாட்டு வீரன் வீட்டிலேயே, அங்கும் இங்கும் ஓடவில்லை. அவன் அதற்கென்று நியமிக்கப்பட்ட இடத்திற்கு மைதானத்திற்கு செல்கிறான். இயேசுகிறிஸ்துவும் மாற்கு 1:35-ல் அதிகாலையில் இருட்டோடே எழுந்து வனாந்தரமான ஓர் இடத்திற்கு சென்றார். அதுபோல நாமும் அதிகாலையில் இருட்டோடே எழுந்து ஆயத்தமாகி, முகத்தைக் கழுவி, தூக்கத்தைப் போக்கிவிட்டு ஜெபிக்கும்படியாக ஒரு இடத்தை தெரிந்துகொண்டு (வீட்டிலேயானாலும் சரி) அந்த இடத்திலேயே சென்று அல்லது ஒரு அறையில் ஜெபிக்கலாம். அப்படி ஜெபிக்க ஆயத்தப்பட்டு, படுக்கையைவிட்டு எழுந்து, அப்புறம்போய் ஜெபிக்கும்போது நாம் உற்சாகமாக ஜெபிக்கலாம். தூக்கம் நம்மை ஆட்கொள்ளாது.

## தவிற்பு:-

விளையாட்டு வீரன் ஒரே ஒருதரம் ஓடிவிட்டு வந்துவிடுவது கிடையாது. விளையாட்டு மைதானம் சென்றதும், வேண்டாத ஆடைகளையெல்லாம் களைந்துவிட்டு அதிகநேரம் ஓடி, ஓடி பயிற்சி எடுக்கிறான். அதுபோல, நாமும் ஜெபிக்க இடத்திற்கு சென்றவுடன் இயேசப்பாவிடம் நமது பாவங்களையெல்லாம் அறிக்கைசெய்து விட்டுவிட்டு அதிகநேரம் நம்மை அர்ப்பணித்து ஜெபிக்கவேண்டும். அடுத்ததாக, அந்த வீரன் ஏதாவது ஒருநாள் சென்று பயிற்சி எடுப்பதில்லை. தினசரி பயிற்சியை தொடருவான். காலையிலும் சரி, மாலையிலும் சரி மற்றும் சமயம் கிடைக்கும்போதெல்லாம் தன்னுடைய பயிற்சியை செய்துகொண்டே இருப்பான். அப்போதுதான் அவன் வெற்றியைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாகின்றான். அதுபோலத்தான் கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! கிறிஸ்தவ வாழ்க்கையின் வெற்றியின் இரகசியமும் உள்ளது. ஆனால் நாமோ என்றாவது ஒருநாள் ஜெபிப்பது, சங்கீதம் 50:15-ல் ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன் என்று கூறியதுபோல இக்கட்டு, சோதனை, வேதனை, இழப்பு வரும்போது மாத்திரம் ஜெபிக்கிறோம். அதனால் நமது ஜெபத்திற்கு பதில் கிடைக்கவில்லை, என்ன கிறிஸ்தவ வாழ்க்கை என்று சொல்லுகிறோம்.

ஏனென்றால் வேதம் சொல்கிறது நீதி. 1:23-33 வரை உள்ள வசனங்களை தெளிவாக, நிதானமாக வாசித்துப் பார்ப்பீர்களாகில் என் ஆலோசனையையெல்லாம் நீங்கள் தள்ளிவிட்டீர்கள். ஆகவே, ஆபத்து உங்களுக்கு சூறாவளியைப்போல வரும்போது, அதிகாலையில் என்னை நோக்கிக் கூப்பிட்டாலும் மறு உத்தரவு கொடுக்கமாட்டேன் என்று தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

ஆகவே அருமையானவர்களே! நம் வாழ்க்கையின் வெற்றியின் இரகசியம் நம் கையில்தான் இருக்கிறது. ஏதாவது ஒருநாள் ஜெபிக்காதபடி, ஆபத்துக்காலத்தில் மட்டும் ஜெபிக்காதபடி, தினசரி நாம் ஜெபிக்கும்படியாக அழைக்கப்படுகிறோம். அதுமாத்திரமல்ல, நமது அருமை ஆண்டவர் இயேசு கிறிஸ்து மாற்கு 1:35-ன் படி அதிகாலையிலும், மத்தேயு 14:23-ன் படி சாயங்கால வேளையிலும், லூக்கா 6:12-ன் படி இராமுழுதும் ஜெபித்து நமக்கு மாதிரியைவைத்து சென்றுள்ளதுபோல நாமும் அதிகாலையிலும், சாயங்காலத்திலும், இராவேளையிலும் மற்றும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் இயேசப்பாவோடு (பேசிக்கொண்டே) ஜெபித்துக்கொண்டே இருந்தால் பாவம் நம்மை அணுகாது; தோல்வி நம்மை மேற்க்கொள்ளாது. ஜெயமான வாழ்க்கையை இம்மையிலும், மறுமையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## வரவேற்கிறோம்!

கடந்த மாதங்களில் நமது சபை ஐக்கியத்தில் புதிய அங்கத்தினர்களாக இணைந்த உங்களை கிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் வரவேற்கிறோம்.

| Name | Native Place | Area |
|---|---|---|
| Mr. Lenin Raj & Family | Mylaudy | Ghala |
| Mr. S. Godwin | Vazhavilai | |
| Mr. C. Berish | Kannanoor | Al Khuwair |
| Mr. Hezed Godson & Famlily | Anberpuram | Bousher |

# பெருமை நமக்கு வேண்டாம்



**மண்ணில்** : 330
**விண்ணில்** : 01-01-379
**ஊர்** : சிசெரியா
**நாடு** : கப்பதோக்கியா
**தரிசன பூமி** : சிசெரியா

பதவியும் பட்டங்களும் பெறுவது மட்டுமா வாழ்க்கை? இல்லை, இல்லவே இல்லை.

சிலர் பதவி வந்தததும் தங்களையும் மறப்பர். தங்களைச் சுற்றி உள்ளோரையும் மறந்துவிடுவர்.

இப்படிப்பட்ட உலகத்தில் ஓர் முன்மாதிரியான வாழ்க்கை வாழ்ந்துக் காட்டியவர்தான் பேசில். கல்வியில் சிறந்தவர்; கற்றுத் தந்தவர்களையும் மிஞ்சியவர்; பேச்சிலே வல்லுநர்; நட்பு பாராட்டுவதில் நல்லுள்ளம் கொண்டவர். சொற்பொழிவாற்றுவதில் சிறந்தவராகக் காணப்பட்டதால் நீதிமன்றத்தில் வழக்கறிஞரானார். புகழும், செல்வமும் அவரைத் தேடி வந்தன. பல பதவிகளும் அவரை நாடி வந்தன. நண்பர்கள் வட்டம் நாலாபுறமும் இருந்து குவிந்தது. பரி.கிரகெரி என்பவர் மட்டுமே இவரின் உண்மை நண்பராக உறுதுணையானார்.

பதவியில் நம்மைப் பறிகொடுத்துவிட்டால் பின்னர் பரிதாபம்தான். பேசில் இதை உணர்ந்தார். பெருமை என்னும் சோதனைக்கு உள்ளாவதை வெறுத்தார். தன்னைத் தேடி வந்த பதவிகள் அனைத்தையும் உதறித் தள்ளினார். தன் செல்வமனைத்தையும் எடுத்து, தரித்திரர், நோய்வாய்ப்பட்டோர் போன்றவர்களைப் பராமரிக்கவும், ஆண்டவரின் அன்பு, தியாகம் போன்றவைகளை எடுத்துரைக்கவும் பயன்படுத்தினார். அருட்பணிக்கே முதலிடம் கொடுத்தார்.

வழக்கறிஞர் தொழிலைவிட்டு துறவறம் மேற்க்கொண்டார். ஏழைகளை அரவணைத்து அவர்களுக்குப் பலவித உதவிகளையும் செய்தார். நாள்தோறும் இவரின் பிரசங்கத்தைக் கேட்க மக்கள் கூட்டம் கூடினர். மக்களுக்காகவே, சிறந்த போதகராய் மாறி, அவர்களின் ஆன்மீக வாழ்வை உயர்த்தினார். ஆயிரக்கணக்கானோர் மறுபிறப்படைந்தனர்.

அன்பரே! மக்களுக்காகவே வாழ்ந்த இம்மாமனிதரைப்போன்று சுயநலமில்லா வாழ்க்கை வாழ ஆயத்தமா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு** : தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் கிருபை அளிக்கிறார் - பேதுரு

# பாதை காட்டும், மா யெகோவா
# (Guide me, O thou great Jehovah)

சங்கீதம் 73:24

பாடல் : Rev. வில்லியம்ஸ்
ராகம் : Rev. வில்லியம்ஸ்

1. பாதை காட்டும், மா யெகோவா,
   பரதேசியான நான்
   பலவீனன், அறிவீனன்,
   இவ்வுலோகம் காடு தான்;
   வானாகாரம்
   தந்து என்னை போஷியும்



இப்பாடலை எழுதிய வில்லியம்ஸ் போதகர் மெதடிஸ்ட் சபையை சேர்ந்தவர். அவர் 1717-ஆம் ஆண்டு, பெப்ருவரி மாதம் 11-ஆம் தேதி உவேல்ஸ் நாட்டில் கார்மார்தென்ஷயர் என்னுமிடத்தில் பிறந்தார். இவரது தந்தை விவசாய தொழில் செய்து வந்தவர். இளமைக் கல்வியை முடித்தபின், இவர் வைத்தியத் தொழிலுக்காக பயில ஆரம்பித்தார். ஆனால் சிறிது காலத்தில் அதை விட்டு, குருத்துவ ஊழியத்தில் ஈடுபட்டு, 1740-ல் டீக்கனாக அபிஷேகம் பெற்று, மூன்று ஆண்டுகள் குருத்துவ ஊழியம் செய்தார். சுவிசேஷப் பிரபல்லியத்தில் மிக்க ஆர்வமுடையவராதலால், சபை ஊழியத்தை விட்டு தனியாக ஊழியம் செய்ய ஆரம்பித்தார். தமது ஊழியத்தின் ஆரம்பத்தில் அவர் வெஸ்லியின் கொள்கைகளை ஆதரித்து, இறுதியில் கால்வினிஸ்டு மெதடிஸ்ட் கோஷ்டியினரைப் பின்பற்றினார். தமது தனி ஊழியத்தில் நாற்பது ஆண்டுகளுக்குள் அவர் தொண்ணூற்று ஆறாயிரம் மைல்கள் பிரயாணம் செய்தார்.

1785-ஆம் ஆண்டு, ஹண்டிங்டன் சீமாட்டியாகிய செலீனா அம்மையார், பக்தியுள்ள வாலிபரைக் குருத்துவ ஊழியத்துக்காகப் பயிற்றுவிக்க தென்வேல்ஸ் நாட்டில் ஒரு வேத சாஸ்திரப் பயிற்சி கல்லூரி ஆரம்பித்தார். கல்லூரியின் ஆரம்ப விழாவில் பாடப்படுவதற்காக ஒரு புதிய பாடலை எழுதித் தருமாறு, 'உவேல்ஸ் நாட்டு இனிய பாடகர்' (Sweet singer of Wales) என்றழைக்கப்பட்ட வில்லியம்ஸ் போதகரை ஹண்டிங்டன் சீமாட்டியார் கேட்டனர். ஆகவே போதகர் 'பாதை காட்டும் மா யெகோவா' என்னும் பாடலை எழுதி, அதற்கேற்ற ஒரு இராகமும் அமைத்து, விழாவில் தமது வாத்தியக் கோஷ்டியுடன் முதல் முறையாகப் பாடினார். முதலில் இப்பாடல் வெல்ஷ் மொழியில் எழுதப்பட்டு, பின்னர் ஆங்கிலத்திலும், இப்போது உலகத்தின் நானாபாகங்களிலும் பல்வேறு மொழிகளிலும்

மொழிபெயர்க்கப்பட்டு, பாடப்பட்டு வருகிறது. இப்பாடல் பல்வேறு இராகங்களில் பாடப்பட்டு வந்தாலும், CWM Rhondda என்னும் உவேல்ஸ் நாட்டு இராகம் அதற்கு மிகப் பொருத்தமானதென்று கருதப்படுகிறது.

வில்லியம்ஸ் போதகர் வெல்ஷ் மொழியில் எண்ணூறுக்கு அதிகமான பாடல்களும், ஆங்கிலத்தில் நூற்றுக்கு அதிகமான பாடல்களும் எழுதியுள்ளார். அவர் எழுதிய வேறு பாடல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படவில்லை. அவர் 1791-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 11-ஆம் தேதி உவேல்ஸ் நாட்டில் பான்டிஸெலின் என்னுமிடத்தில் தமது 74-ம் வயதில் காலமானார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தின் அடிமைதனத்தின்று விடுதலையடைந்து நாற்பது ஆண்டுகளாகப் பாலைவனத்தில் பிரயாணம் செய்து, இறுதியில் கானான் தேசத்தையடைந்தனர். பாதை தெரியாத பாலைவனத்தில் அவர்களுக்கு வழிகாட்டியது பகலில் மேகஸ்தம்பமும், இரவில் தீப ஸ்தம்பமுமே. வழியில் அவர்களுக்கு தேவையான எல்லாவற்றையும் கடவுளே ஆச்சரியமான விதமாக அளித்தார். நாமும் நமது சொற்பக் காலம் பூலோக வாழ்க்கையில், பாலைவனத்தில் வழிதெரியாது அலைந்து திரியும் பரதேசிகள் போலவே இருக்கிறோம். கடவுளின் வழிகாட்டுதலை நாம் பின்பற்றினால் இஸ்ரவேலர் யோர்தானைப் பத்திரமாகக் கடந்து கானான் தேசத்தை அடைந்தது போல, சாவின் அந்தகாரமாகிய யோர்தானைப் பத்திரமாக கடந்து பரம கானானையடையலாம்.

**பாடகர் குழு – C.S.I Tamil Church Oman** (நன்றி: அமைதி நேர ஊழிய வெளியீடு)

## ஆண்கள் ஐக்கிய சங்க அறிக்கை

கிறிஸ்து இயேசுவின் இனிய நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

நமது திருச்சபையின் ஆண்கள் சங்க ஆண்டுவிழா டிசம்பர் மாதம் 13-ம் தேதி போதகர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இறைமக்கள் திரளாக கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். சிறப்பு நிகழ்வுகளை ஆண்கள் சங்கத்தினர் நடத்தினர். ஆண்கள் சங்க செயலர் திரு. சைலஸ் அவர்கள் இறைசெய்தி கொடுத்தார்கள். காணிக்கைப் பாடல் ஆண்கள் சங்க அங்கத்தினர்களால் பாடப்பட்டது. அந்நாளின் தொழுகை ஆண்கள் சங்க அங்கத்தினர்களால் தாங்கப்பட்டது. தொழுகையின் நிறைவில் போதகர் ஜெபித்து ஆசி கூறினார். புத்தாண்டின் ஆண்கள் சங்கத்திற்கு அனைத்து இறைமக்களையும் அன்போடு வரவேற்றுக்கொள்கிறேன்.

**திரு. சைலஸ்**
**ஆண்கள் ஐக்கிய சங்க செயலர்**

## பெண்கள் ஐக்கிய சங்க அறிக்கை




புத்தாண்டில் பிரவேசித்திருக்கும் உங்கள் யாவருக்கும் கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

நமது திருச்சபையின் பெண்கள் சங்க ஆண்டுவிழா நவம்பர் மாதம் 22-ம் தேதி நடைபெற்றது. சிறப்பாக பங்குபெற்ற அனைவருக்கும் நன்றி. போதகர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பெண்கள் சங்க உறுப்பினர்கள் கலைநிகழ்ச்சிகளை நடத்தினர். அறிக்கை வாசிக்கப்பட்டது. திருமதி. சாரா ராஜாசிங் அவர்களால் இறைசெய்தி வழங்கப்பட்டது. பெண்கள் சங்கத்தினரால் சிறப்பு பாடல் பாடப்பட்டது. போதகர் ஜெபித்து இறை ஆசி கூற கூட்டம் நிறைவுற்றது.

புத்தாண்டில் பெண்கள் சங்க அங்கத்தினர்கள் யாவரும் உற்சாகத்தோடு கூடுகையில் கலந்துக்கொள்ள அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி. சாரா ராஜாசிங்**
**பெண்கள் ஐக்கிய சங்க செயலர்**

## வாழ்த்துகிறோம்!

**“இது கர்த்தரால் ஆயிற்று, நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்”**



கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 30-ம் தேதி பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள

**Mr. Jude Dennis Samuel & Mrs. Rubina Grace**

தம்பதியினரை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

கர்த்தருடைய கிருபையால் ஜனவரி மாதம் 20-ம் தேதி பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்படவுள்ள

**Miss. Shyni & Mr. Shashank**

மணமக்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# நிகழ்வும் - பாடமும்





ஒருமுறை சாத்தான் பரிசுத்தவான்களை அழிக்கவேண்டும் என்று முடிவெடுத்து, இயற்கையிடம் சென்று முறையிட்டான். இயற்கையோ சரி நான் அழிக்கின்றேன் என்றது.

அதனால் இயற்கையானது சூரியனிடம் சென்று சூரியனே, இந்த பரிசுத்தவானை சுட்டெரித்து அழித்துவிடு என்றது. அப்பொழுது சூரியன், ஏற்கெனவே யோசுவா என்ற ஒரு பரிசுத்தவான் என்னை அசையாமல், ஆடாமல் வானத்தில் ஒருநாள் முழுவதும் நிற்க வைத்துவிட்டான். ஆதலால் பரிசுத்தமான மனிதனை என்னால் ஏதும் செய்யமுடியாது என்றது.

இயற்கை, கடலிடம் சென்று கடலே நீயாவது, இந்த பரிசுத்தவானை அழித்து விடக்கூடாதா? என்றது. அப்பொழுது கடல் அது என்னால் முடியாது, ஏற்கெனவே மோசே என்ற ஒரு பரிசுத்தவான், சாதாரண ஒரு கோலை வைத்துக்கொண்டு என்னை இரண்டாக பிளந்ததை நான் இன்னும் மறக்கவில்லை! அவர்கள் வழிபடும் நம்மையெல்லாம் படைத்த இயேசு நாதர் 'இரையாதே, அமைதலாயிரு' என ஒருமுறை என்னை அதட்டி அமைதியாக்கி மற்றும் என்மீது நடந்துபோனது போதாதென்று பேதுரு என்ற சீஷனையும் கூட என்மேல் நடக்கச் செய்து என் கொட்டத்தை அடக்கியது எனக்கு இன்னும் மறக்கவில்லை. தேவ மனுஷனுக்கு விரோதமாக என்னால் செயல்படமுடியாது என்றது.

வேதனையோடு நெருப்பிடம் சென்ற இயற்கை, நெருப்பே! உன் எரிக்கும் சக்தியால் அந்த பரிசுத்தவானை அழிக்கக்கூடாதா? என்றது. அப்படித்தான் ஒருமுறை சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூன்று பரிசுத்தவான்களை அழிக்க நினைத்தேன். ஆனால் என் நெருப்புவாசனை கூட அவர்கள் மேல் வீசவில்லை. அன்றிலிருந்து பரிசுத்தவானை கண்டாலே எனக்கே ஒரு பயம்தான் என்றது.

இயற்கை மிகுந்த வேதனையோடு, மழையிடம் சென்று மழையே! நீயாவது பரிசுத்தவான்களை அழிக்கக்கூடாதா? எனக்கு உதவி செய்யக்கூடாதா? என்றது. அதற்கு மழை, ஒருமுறை இஸ்ரவேல் தேசத்திற்கு மழையே பெய்யாமல் இருந்து கடும் பஞ்சத்தை உண்டாக்கினேன். ஆனால் எலியா என்ற ஒரு பரிசுத்தவான் உள்ளங்கை மேகத்தில் என்னைக் கொண்டுவந்து வெள்ளத்தையே உண்டாக்கி விட்டான். பரிசுத்தவானை என்னால் ஏதும் செய்யமுடியாது என்றது.

அப்பொழுது இயற்கை மிகுந்த கோபம்கொண்டு பரிசுத்தவானை அழிக்க வேறு எந்த வழியும் இல்லையா? அவனை அழிக்க முடியவே முடியாதா?

என்றது. அப்பொழுது சிருஷ்டிகள் யாவும் பரிசுத்தவானை அசைக்கவும். அழிக்கவும் ஒருநாளும் முடியவே முடியாது. மாறாக அவன் இயேசு என்ற நாமத்தைக்கொண்டு நம்மையே அசைத்துவிடுவான் என்றன.

சேனைகளின் தேவனாகிய கர்த்தரையே முழுமனதார விசுவாசித்து, அவர் சத்தத்துக்கு செவிகொடுத்து, கீழ்ப்படிந்து வாழ்ந்து ஆண்டவரை மகிமைப்படுத்தவேண்டும்.

“நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை, நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய், அக்கினிஜுவாலை உன் பேரில் பற்றாது” (ஏசாயா 43:2).

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நமது திருச்சபை போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழுவுக்காகவும், அவர்கள் தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிடவும் ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், பேராயங்களுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், பேராயர், போதகர்கள் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.
- நமது பேராயத்தின் பேராயர் Rt. Rev. Dr. செல்லையா அவர்கள் இறைபணி மூலம், இறை சித்தம் நிறைவேற்றும் பேராயராய் செயல்பட்டு,

பேராயம் நல்ல முறையில் இயங்கவும், இறையருள் வேண்டி மன்றாடுவோம்.

**மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- தேசத்தலைவர்களுக்காகவும், அரசு அதிகாரிகளுக்காகவும், அதிகாரத்திலுள்ள அனைவரும் நேர்மையும் பயனுள்ள வகையிலும் ஆளுகைசெய்ய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இன்றைய நம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அரசு சலுகைகளை, உரிமைகளைக்கூட சரிவர பெறமுடியாதச் சூழலில், ஊழல் என்னும் தீமை அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- மது என்னும் தீமை இன்றைய சமுதாயத்தையும், குடும்பத்தையும், தனிமனித வாழ்வையும் பெரிதும் பாதித்துவரும் சூழலில் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.
- வாழ்வில் குறுக்கிடும் துன்பம், தோல்வி, நோய், கடன்பாரம் போன்றவைகளுக்கு தீர்வு தற்கொலையே என்கிற முடிவில் பலர் தங்களுக்கு ஆண்டவர் ஈவாக தந்த உயிரை தாங்களே அழித்து வருகின்றனர். குறிப்பாக இளம் தலைமுறையினரே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துவரும் சூழலில், தற்கொலை என்னும் தீமை முழுமையாக அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

- வேலையின்றி வாடுவோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க அரசு புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இந்திய தேசத்தின் பொருளாதார வீழ்ச்சி நிலைமாற மன்றாடுவோம்.

**குடும்பங்களுக்காக ஜெபிக்க:-**

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.
- வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.
- கருவுற்றிருக்கிற சகோதரிகளின் உடல்நலத்திற்காகவும், சுகமான விடுதலைக்காகவும், தாய் சேய் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.

## பாலைவன மன்னா வினா விடை எழுதுவோர் கவனத்திற்கு

1. 11 மாதங்கள் வெளிவரும் வினாக்களுக்கும் விடையளிக்க முயற்சிக்கவேண்டும். 6 மாதங்களும், அதற்கு மேல் எழுதுவோருடைய மதிப்பெண்களே ஆண்டு நிறைவில் பரிசுக்காக கணக்கிடப்படும்.
2. அலைபேசி உதவிகளையும், உடன் நண்பர்களின் உதவிகளையும் தவிர்த்து, திருமறையைப் படித்து, உண்மையுடன் விடை எழுத முன்வரவேண்டும்.
3. விடைகள் ஒவ்வொரு மாதமும் மூன்றாம் வெள்ளிக்கிழமை தொழுகைக்குப்பின் அல்லது 20-ம் தேதி மாலைக்குள் போதகரிடம் கொடுக்கவேண்டும்.
4. ஒமான் பகுதியை விட்டு வெளியே செல்வோர் அல்லது இந்தியா செல்வோர் விடையை 20-ம் தேதிக்கு முன் வாட்சப் அலைபேசி செயலி வழி போதகர் எண்ணிற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

இறையன்பர்களே! இந்தத் திருமறை வினாவிடை பகுதி வாசகர்களை திருமறையைப் படிக்கத் தூண்டவேண்டும் என்ற நல் நோக்கத்தில் நடத்தப்படுவது. எனவே அனைவரும் பங்குபெறவும், திருமறை அறிவை வளர்த்துக்கொள்ளவும் அன்போடு கேட்கிறேன்.

## ஜனவரி 2020 மாத கேள்விகள்

### (சங்கீதம் 72-82 வரை)

1. கர்த்தருடைய கூடாரம் எங்கிருக்கிறது?
2. ஆயுதமணிந்த வில்வீரர் யார்?
3. சரப்பணியைப்போல் சுற்றிக்கொள்வது எது?
4. உழுதுபோடுகிற மிருகம் எது?
5. ஆட்டுத் தொழுவங்களிலிருந்து கர்த்தர் தெரிந்துகொண்ட தாசன் யார்?
6. கோடாரிகளை ஓங்கிச் சோலையிலே மரங்களை வெட்டுகிறவன் யார்?
7. கர்த்தரை விட்டு தூரம் போகிறவர்கள் என்ன ஆவார்கள்?
8. ஆலாங்கட்டியினால் அழிக்கப்பட்ட மரம் எது?
9. ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்துகிற நியாயாதிபதி யார்?
10. தூதர்களின் அப்பத்தை சாப்பிட்டது யார்?
11. சிறுமைப்பட்டவனுக்கும், திக்கற்றவனுக்கும் என்ன செய்யவேண்டும்?
12. கர்த்தருடைய அதிசயங்களை யாருக்கு விவரிக்கவேண்டும் என்று வேதம் சொல்லுகிறது?
13. கர்த்தர் வாசமாயிருந்த பர்வதம் எது?
14. யாருடைய கொம்புகளையெல்லாம் வெட்டிப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
15. எதைக் கேட்டு தங்கள் இருதயத்தில் தேவனை பரீட்சைப் பார்த்தார்கள்?
16. கர்த்தருடைய ஜனங்களை ஒரு ஆட்டு மந்தையைப்போல் வழிநடத்தியவர்கள் யார்?
17. பண்டிகை நாட்களில் என்ன ஊதவேண்டும்?
18. பூமியின் இருளான இடங்கள் எதால் நிறைந்திருக்கிறது?
19. எந்த தண்ணீர்களிடத்தில் உன்னை சோதித்து அறிந்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
20. அயலார் நிந்தித்த நிந்தையை எத்தனையாக அவர்கள் மடியிலே திரும்ப பண்ணுவார்?

## ஜனவரி 2020 மாத கேள்விகள்
## (2 நாளாகமம் 31 முதல் 36 வரை)

1. எசேக்கியா ராஜா எந்த ஆற்றில் அணைக் கட்டினான்?
2. யோவாகாஸ் ராஜாவாகிறபோது எத்தனை வயது?
3. கர்த்தருக்கு முன்பாக நன்மையும், செம்மையும் உண்மையுமானதைச் செய்த ஆசாரியன் யார்?
4. பஸ்கா ஆட்டுக்குட்டியின் தோலுரித்தவர்கள் யார்?
5. எட்டு வயதில் ராஜாவாகி, முப்பத்தேழு வருஷம் எருசலேமை அரசாண்டது யார்?
6. மனாசேயின் புத்திரர் தீ மிதித்த பள்ளத்தாக்கு யாருடையது?
7. யோயாக்கீன் சிறிய தகப்பன் யார்?
8. லேவியன் கெனானியாவின் தம்பி யார்?
9. முட்செடிகளில் பிடித்து, வெண்கலச் சங்கிலியால் கட்டி பாபிலோனுக்கு கொண்டுபோகப்பட்ட ராஜா யார்?
10. ஏசாயா தீர்க்கதரிசி யாருடைய குமாரர்?
11. தன் பெயரை யோயாக்கீம் என்று மாற்றியவன் யார்?
12. சல்லூம் என்னும் வஸ்திரக்கலை விசாரிப்புக்காரன் மனைவி யார்?
13. தேவனுக்குச் செலுத்தும் உற்சாக காணிக்கைகள் மேல் அதிகாரியாக இருந்தவன் யார்?
14. மூன்று மாதமும், எட்டு நாளும் எருசலேமை அரசாண்ட ராஜா யார்?
15. பன்னிரண்டு வயதில் ராஜாவான எசேக்கியாவின் குமாரன் யார்?
16. யோசியா ராஜாவின் ஞானதிருஷ்டிக்காரன் யார்?
17. செத்த முகமாய் தன் தேசத்திற்கு திரும்பிப்போன அசீரியா ராஜா யார்?
18. ஆமோன் எத்தனை வருடம் எருசலேமில் அரசாண்டான்?
19. சாப்பானின் குமாரன் யார்?
20. கர்த்தருடைய ஆலயத்திலே, கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தை கண்டெடுத்த ஆசாரியன் யார்?

## May God Bless All

## Birthday Celebrants – January 2020

| | |
|---|---|
| 04th January | Master. Akash David Mehandro, S/o Mr. Baskar |
| 06th January | Mr. Victor Thayasingh |
| 06th January | Miss. Agnes Yarona, D/o Mr. Kanagavel |
| 06th January | Mrs. Monisha, W/o Mr. Jerry Jones |
| 07th January | Mr. Sujin Issac Samuel |
| 11th January | Miss. P. Gardeina Eve, D/o Mr. Prem Vijins |
| 12th January | Mr. R. Saju |
| 13th January | Miss. Angelin Pius Justa, D/o Mr. Vinolin Vetha Kumar |
| 15th January | Miss. Jessie Chandra, D/o Mr. Kasiraja |
| 18th January | Master. D. Jason, S/o Mr. Dinakaran |
| 19th January | Mr. Jean C. R. Shibin |
| 19th January | Miss. Jayna Giftlin, D/o Mr. Bensam |
| 21st January | Mr. T. Gnana Ruban |
| 23rd January | Mrs. Binita, W/o Mr. Pratheesh |
| 26th January | Miss. Jevisha, D/o Mr. Jino John |
| 26th January | Miss. B. A. Braelyn Jo, D/o Mr. Bejo Nelson |
| 26th January | Mr. M. Sheeken Paulk |
| 27th January | Miss. Sujimol, D/o Mrs. Susamma |
| 29th January | Mrs. Sujithra, W/o Mr. T. Raju |
| 29th January | Master. Wesley J. Bose, S/o Mr. Jose Chandra Bose |
| 31st January | Miss. Karen Edward, D/o Mr. Edward Sam |
| 31st January | Mr. P. Lenin |

## Wedding Anniversary Celebrants – January 2020

| | |
|---|---|
| 01st January | Mr. Robert Dhas & Mrs. Bindhu |
| 04th January | Mr. Jerry Sathya & Mrs. Sapthekha |
| 07th January | Mr. Vinobha & Mrs. Sumimol |
| 11th January | Mr. Nethaji Jacob Durai & Mrs. Diana Angel |
| 15th January | Mr. Ajin & Mrs. Berlin Sony |
| 17th January | Mr. Dhana Raj & Mrs. Alice |

## Wedding Anniversary Celebrants – Jan 2020 Continued

| | |
|---|---|
| 18th January | Mr. Prem Vijins & Mrs. Shakina |
| 19th January | Mr. C. Sujin & Mrs. Gracelin Melba |
| 30th January | Mr. Pushpakaran & Mrs. Nirmala |
| 30th January | Mr. Ahigen Paul & Mrs. Pavithra |

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 02-01-2020 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 03-01-2020 | வெள்ளி – பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 10-01-2020 | வெள்ளிஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 11-01-2020 | சனி – உபவாச ஜெபக் கூட்டம்<br>இடம் : மார்த்தோமா ஹால் / காலை 10:30–1:00 |
| 16-01-2020 | வியாழன் - பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 16-01-2020 | வியாழன் - ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>இடம் : மார்த்தோமா ஹால் / நேரம்: இரவு 9:00–11:00 |
| 17-01-2020 | வெள்ளி – பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 24-01-2020 | வெள்ளிஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 31-01-2020 | வெள்ளிஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 01-02-2020 | சனி - அருணோதய ஆராதனை<br>இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00–6:00 |
| 06-02-2020 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 07-02-2020 | வெள்ளி- பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |

# அனுதின மன்னா – ஜனவரி 2020

அன்பர்களே!

கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

மேலும் ஒரு புதிய ஆண்டைக்காண கர்த்தர் நமக்கு கிருபை செய்திருக்கிறார். இந்த 2020-வது ஆண்டில் இதுவரை திருமறையை ஒருமுறையாவது முழுமையாய் வாசிக்காதவர்கள் உண்டென்றால் அதை வாசிக்க ஆவல்கொள்ளுங்கள். அதற்கான திருமறைப்பகுதி இந்த மாதத்திலிருந்து தரப்படுகிறது. திருமறையை முழுவதுமாக ஒரு முறையாவது வாசிப்பது நமது மனதுக்கு மகிழ்வைத் தரும்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜனவரி 1 | புதன் | சங்கீதம் 30 | சங். 30:11 | ஆதி. 1-3 அதி. |
| ஜனவரி 2 | வியாழன் | செப். 3:14-20 | செப். 3:17 | ஆதி. 4-7 அதி. |
| **ஜனவரி 3** | **வெள்ளி** | **ஏசா. 12:1-6** | **ஏசா. 12:3** | **ஆதி. 8-11 அதி.** |
| ஜனவரி 4 | சனி | நீதி. 29:1-11 | நீதி. 29:7 | ஆதி. 12-16 அதி |
| ஜனவரி 5 | ஞாயிறு | சங். 97:1-12 | சங். 97:11 | ஆதி. 17-19 அதி. |
| ஜனவரி 6 | திங்கள் | நீதி. 28:21-28 | நீதி. 28:25 | ஆதி. 20-22 அதி. |
| ஜனவரி 7 | செவ்வாய் | சங். 26 | சங். 26:1 | ஆதி. 23-25 அதி. |
| ஜனவரி 8 | புதன் | யோபு 13:1-16 | யோபு 13:15 | ஆதி. 26-28 அதி. |
| ஜனவரி 9 | வியாழன் | எரே. 17:5-14 | எரே. 17:7 | ஆதி. 29-31 அதி. |
| **ஜனவரி 10** | **வெள்ளி** | **எபி. 3:12-19** | **எபி. 3:14** | **ஆதி. 32-33 அதி.** |
| ஜனவரி 11 | சனி | ஏசா. 2:1-22 | ஏசா. 2:22 | ஆதி. 34-36 அதி. |
| ஜனவரி 12 | ஞாயிறு | நாகூம் 1:1-15 | நாகூம் 1:7 | ஆதி. 37-39 அதி. |
| ஜனவரி 13 | திங்கள் | சங். 51:1-12 | சங். 51:10 | ஆதி. 40-42 அதி. |
| ஜனவரி 14 | செவ்வாய் | ரோமர் 12:1-21 | ரோமர் 12:2 | ஆதி. 43-45 அதி. |
| ஜனவரி 15 | புதன் | 2கொரி. 5:1-21 | 2கொரி. 5:17 | ஆதி. 46-47 அதி. |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜனவரி 16 | வியாழன் | எபேசி. 4:14-24 | எபே. 4:23,24 | ஆதி. 48-50 அதி. |
| **ஜனவரி 17** | **வெள்ளி** | **லூக். 22:14-27** | **லூக். 22:20** | **யாத். 1-4 அதி.** |
| ஜனவரி 18 | சனி | லூக். 1:5-25 | லூக். 1:6 | யாத். 5-7 அதி. |
| ஜனவரி 19 | ஞாயிறு | ஆதி. 6:7-18 | ஆதி. 6:9 | யாத். 8-10 அதி. |
| ஜனவரி 20 | திங்கள் | ரூத் 1:1:16 | ரூத் 1:16 | யாத். 11-13 அதி. |
| ஜனவரி 21 | செவ்வாய் | 1சாமு. 1:1-28 | 1சாமு. 1:15 | யாத். 14-16 அதி. |
| ஜனவரி 22 | புதன் | நியா. 13:1-14 | நியா. 13:8 | யாத். 17-20 அதி. |
| ஜனவரி 23 | வியாழன் | யோசு. 24:14-24 | யோசு. 24:15 | யாத். 21-23 அதி. |
| **ஜனவரி 24** | **வெள்ளி** | **சங்கீதம் 128** | **சங். 128:5** | **யாத். 24-27 அதி.** |
| ஜனவரி 25 | சனி | சங்கீதம் 100 | சங். 100:2 | யாத். 28-30 அதி. |
| ஜனவரி 26 | ஞாயிறு | நெகே. 8:9-18 | நெகே. 8:10 | யாத். 31-34 அதி. |
| ஜனவரி 27 | திங்கள் | சங்கீதம் 25 | சங். 25:10 | யாத். 35-37 அதி. |
| ஜனவரி 28 | செவ்வாய் | ஆதி. 9:8-17 | ஆதி. 9:10 | யாத். 38-40 அதி. |
| ஜனவரி 29 | புதன் | எபிரெ. 8:1-13 | எபி. 8:13 | லேவி. 1-4 அதி. |
| ஜனவரி 30 | வியாழன் | 2கொரி. 3:1-18 | 2கொரி. 3:6 | லேவி. 5-7 அதி. |
| **ஜனவரி 31** | **வெள்ளி** | **சங். 111:1-10** | **சங். 111:5** | **லேவி.8-11 அதி.** |
| பிப்ரவரி 1 | சனி | யாக். 2:1-10 | யாக். 2:8 | லேவி.12-14 அதி. |
| பிப்ரவரி 2 | ஞாயிறு | கலா. 3:21-29 | கலா. 3:26 | லேவி.15-17 அதி. |
| பிப்ரவரி 3 | திங்கள் | எசேக். 37:1-14 | எசேக். 37:5 | லேவி.18-20 அதி. |
| பிப்ரவரி 4 | செவ்வாய் | எசேக். 34:22-28 | எசேக். 34:27 | லேவி.21-23 அதி. |
| பிப்ரவரி 5 | புதன் | யாக். 2:1-10 | யாக். 2:8 | லேவி.24-25 அதி. |
| பிப்ரவரி 6 | வியாழன் | எசேக். 11:14-20 | எசேக். 11:20 | லேவி.26-27 அதி. |
| பிப்ரவரி 7 | வெள்ளி | ஏசாயா 42:1-7 | ஏசா. 42:3 | எண். 1-2 அதி. |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ ஜனவரி 2020

| | | |
|---|---|---|
| 03-01-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Golden Irene Sheeja Robin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jerry Sathya |
| 10-01-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Gracilin Melba Sujin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Joel |
| 17-01-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Gracelin Rani Bensam |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Johan Pratheep |
| 24-01-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Jancy Deepa Victor |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. John Jacob |
| 31-01-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Jeya Victor |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Kanagavel |

# வாசகர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

# WISH YOU ALL A HAPPY & PROSPEROUS NEW YEAR 2020!



# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**
**Land Line : 2470 5784**
**E-mail : csitco@gmail.com**
**www.csitamilchurchoman.org**


**(For Private Circulation Only)**